ஓம் சரவணபவ

# அருள்மிகு திருமுருகன் கோயில்

## மொன்றியல்

# பண்ணிசைப் போட்டி 2012

**விண்ணப்ப முடிவு நாள் : 15-12-2011**



# உள்ளடக்கம்

அறிவித்தல் .................................................3

போட்டி நிபந்தனைகள் .......................................5

போட்டிப்பிரிவுகள் ...........................................7

தேர்ச்சிக்கான பாடல்கள்

மழலையர் பிரிவு ..........................................9

பாலர் பிரிவு ............................................. 10

கீழ்ப் பிரிவு ..............................................11

மத்திய பிரிவு ........................................... 12

இடைநிலைப் பிரிவு .......................................14

மேற்பிரிவு ............................................... 16

உயர் பிரிவு / அதி உயர் பிரிவு ............................ 19

உ

**சிவமயம்**

## அருள்மிகு திருமுருகன் கோயில்
## மொன்றியல்

# பண்ணிசைப்போட்டி – 2012

அன்புடையீர்,

கியூபெக் சைவ மகாசபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வரும் பண்ணிசைப்போட்டியின் 18ஆவது நிகழ்வு 2012ம் ஆண்டு இடம்பெறவுள்ளது. இப்போட்டியானது எட்டு பிரிவுகளில் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற முதல் மூவருக்கு சிறப்புப் பரிசில்களும், தேர்ச்சிபெற்ற போட்டியாளர்கள் என நடுவர்களால் கணிக்கப்பட்ட ஏனையோர்களுக்குத் தேர்ச்சிச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படும்.

**நுழைவுக்கட்டணம் 10.00 டொலர்கள் ஆகும்.**

தொடர்ந்து வரும் பக்கங்களில் போட்டி பற்றிய ஏனைய விபரங்கள் அனைத்தும் தரப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் தேவைப்படின் (514) 683–8044 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆலய பணிமனை அலுவலருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

2012ஆம் ஆண்டு தைத்திங்களில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் வெற்றி பெற்றோரையும், தேர்ச்சி பெற்றோரையும் வழமைபோல் சிறப்பிப்பதென முடிவு செய்துள்ளோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பக்தியுடன்,

கியூபெக் சைவ மகாசபை

உ
சிவமயம்

# அருள்மிகு திருமுருகன் கோயில்
# மொன்றியல்

# பண்ணிசைப்போட்டி – 2012

## போட்டி நிபந்தனைகள்

1. கனடாவில் வாழும் எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ள தகைமையுடையவர்.
2. போட்டித்தினத்தன்று தமது மருத்துவ அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் தமது வயதெல்லையை நிரூபித்தல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவங்கள் 2011 மார்கழி மாதம் பதினைந்தாம் திகதியன்றோ (15–12–2011) அதற்கு முன்பதாகவோ ஆலய பணிமனையில் சமர்ப்பித்தல் வேண்டும். போட்டிகளின் திகதி பின்னர் அறிவிக்கப்படும். தவிர்க்க முடியாத காரணத்தால் போட்டியை ஒத்திவைக்கும் அதிகாரம் கியூபெக் சைவ மகாசபைக்கு உண்டு.
4. இப்போட்டியில் கலந்து கொள்ளும் அனைவரும் தத்தம் பிரிவுக்குரிய திருமுறைகளை விதிக்கப்பட்ட பண்ணுடன் பிழையின்றி இசைக்க வேண்டும்.
5. திருமுறைகளின் பண், முழுமனனம், உச்சரிப்புத்தெளிவு, சமர்ப்பணம் ஆகிய அம்சங்கள் கவனிக்கப்படும். போட்டியாளர்கள் விரும்பின் சுருதிப்பெட்டி பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
6. போட்டி நடைபெறும் மண்டபத்திற்குள் புகைப்படக் கருவிகளோ, சலனப்படக் கருவிகளோ, ஒலிப்பதிவுக் கருவிகளோ மற்றும் கவனத்தை திசைதிருப்பும் வேறெந்தப் பொருட்களும் அனுமதிக்கப்படமாட்டது.
7. நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவானது.

# பண்ணிசை போட்டி பிரிவுகள்

| பிரிவு | வயதெல்லை | தேவாரம் | திருவாசகம் | திருவிசைப்பா | திருப்பல்லாண்டு | திருப்புராணம் | திருப்புகழ் |
|---|---|---|---|---|---|---|---|
| மழலையர் பிரிவு<br>5<br>வயதிற்குள் உட்பட்டோர் | 2006–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | | | | | |
| பாலர் பிரிவு<br>5 – 7<br>வயதிற்குள் உட்பட்டோர் | 2004–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | | | | ௐ | |
| கீழ்ப்பிரிவு<br>7 – 9<br>வயதிற்குள் உட்பட்டோர் | 2002–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | | | ௐ | |
| மத்திய பிரிவு<br>9 – 11<br>வயதிற்குள் உட்பட்டோர் | 2000–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | | | ௐ | ௐ |
| இடைநிலைபிரிவு 11<br>– 13 வயதிற்குள்<br>உட்பட்டோர் | 1998–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | ௐ | | ௐ | ௐ |
| மேற்பிரிவு<br>13 –15<br>வயதிற்குள் உட்பட்டோர் | 1996–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ |
| உயர்பிரிவு<br>15 –17<br>வயதிற்குள் உட்பட்டோர் | 1994–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ |
| அதி உயர்பிரிவு<br>17 –19<br>வயதிற்குள் உட்பட்டோர் | 1992–12–01<br>அல்லது<br>அதன் பின்<br>பிறந்தோர் | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ | ௐ |

# மழலையர் பிரிவு

## தேவாரம்

பண்: கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

# பாலர் பிரிவு

## தேவாரம்

பண்: கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

## திருப்புராணம்

பண்: செஞ்சுருட்டி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு கரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

# கீழ்ப்பிரிவு

## தேவாரம்

பண்: இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு–ஆல வாயான் திருநீறே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருப்புராணம்

பண்: இந்தளம்

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

# மத்திய பிரிவு

## தேவாரம்

பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினனுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருப்புராணம்

பண்: செஞ்சுருட்டி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு கரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

# திருப்புகழ்

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்க ளுறவாமோ
உனதிரு வடியினை யருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# இடைநிலைப் பிரிவு

## தேவாரம்

பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்நெடும் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே!

## திருப்புராணம்

வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீத வள வயற் புகலித் திருஞான் சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

தீராப் பிணிதீர சீவாத் ...... துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் ...... கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் ...... கிரிராசே
பேராற் பெரியோனே பேரூர்ப் ...... பெருமாளே!

திருச்சிற்றம்பலம்

# மேற்பிரிவு

## தேவாரம்

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை ஆள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
  பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
  திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
  ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
  வருகவென் றருள்புரி யாயே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய்மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

பண்: காந்தாரம்

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

# திருப்புகழ்

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்க ளுறவாமோ
உனதிரு வடியினை யருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே

திருச்சிற்றம்பலம்

# உயர் பிரிவு / அதி உயர் பிரிவு

## தேவாரம்

பண்: காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

## திருவாசகம்

பண்: மோகனம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

# திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
  என்உயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
  பொன்நெடும் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
  மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
  உண்டென உணர்கிலேன் யானே!

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
  சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
  பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
  உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
  பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

பண்:

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
“பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுஉன் அடியின்கீழ் இருக்க” என்றார்.

# திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்த சற் குருநாதா
திருவாவினன் குடிப்பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

அட்டைப் படத்தில் திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர்.


கியூபெக் சைவ மகாசபை

**SIVA MISSION OF QUEBEC**

1611 **St. Regis Blvd**

**D. D. O, QC, H9B 3H7**

**Tel: (514) 683-8044**